# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 190/2019/மா**
**ஆணை நாள்: 28–01–2020**

திரு. கண்ணன்,
S/o. மாரியம்மாள்,
திண்டுக்கல். – **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, முனிசிபல் காலனி நெட்டுத் தெரு எண்.10G/177 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கண்ணன் என்பவரது 15.11.2019 நாளிட்ட மனு 18.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.190/மா/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை :-**

முறையீட்டு மனுதாரர் தனது 15.11.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது வளர்ப்பு தாயார் செல்வி. மாரியம்மாள் திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமானார் என்றும், அவரது பணி பதிவேட்டில் தனது பெயரை பதிவு செய்துள்ளார் என்றும், தான் வாரிசு என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தனக்கு கருணையின் அடிப்படையில் பணி மற்றும் இதர பயன்கள் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் நடுவத்தின் 28.11.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ள 20.01.2020 நாளிட்ட அறிக்கையில் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வந்து

கடந்த 09.02.2013 அன்று பணியிடை காலஞ்சென்ற செல்வி. மாரியம்மாள்/கந்தன் என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு கணக்கினை கணக்கிட்டு அதற்கான பணப்பலன்களை தனக்கு வழங்கிட கோரி 1. தனியரின் இறப்பு சான்று, 2. வாரிசு சான்று நகல் 3. திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.814/2012ல் 23.08.2016 தேதிய தீர்ப்புரையின் நகல் 4. நோட்டரி அட்வகேட் மூலம் பெறப்பட்ட தத்து ஆவண நகல் ஆகியவற்ற இணைத்து தனியரின் தத்தெடுக்கப்பட்ட மகனும் (தம்பி மகன்) வாரிசுமாகிய திரு. எஸ். கண்ணன் விண்ணப்பித்திருந்தார் என்றும், இருப்பினும் திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்ற தீர்ப்புரையில் திரு. கண்ணன் த/பெ. சுப்பையா என்பதற்கு பதிலாக திரு. கண்ணன் த/பெ. கருப்பையா என தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து, மாநகராட்சி வழக்குறைஞரின் கருத்துரை கோரப்பட்டதில், நீதிமன்றம் மூலம் திரு. கண்ணன் த/பெ. சுப்பையா என திருத்தம் செய்து உத்தரவு பெறப்பட்ட பின்பு உரிய பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் திரு. எஸ். கண்ணன் தனது தகப்பனார் பெயரை நீதிமன்ற தீர்ப்புரையில் பெயர் திருத்தம் செய்து அதன் நகலினை இணைந்து தனது 17.03.2018 நாளிட்ட விண்ணப்பத்தில் தனக்கு கருணையின் அடிப்படையில் பணி வழங்க கோரியிருந்ததைத் தொடர்ந்து தனியரின் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டதில் அரசாணை எண்.120 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள்:26.06.1995ன்படி நிரந்தர பணியிடத்தில் பணிபுரிந்த பணியாளர் பணியிடை காலஞ்சென்றால், பணியாளர் இறந்து 3 ஆண்டுகளுக்குள் அவரது நேரடி அல்லது தகுதியுள்ள வாரிசுதாரர்கள் விண்ணப்பித்திருந்தால் மட்டுமே கருணை அடிப்படையிலான பணி வழங்கிட இயலும் என்றும், ஆனால் மனுதாரர் தனது வளர்ப்பு தாயான செல்வி. மாரியம்மாள்/கந்தன் காலஞ்சென்று சுமார் 3 ஆண்டுகளுக்கு பின்பே விண்ணப்பித்ததால், மேற்படி அரசாணையின்படி மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தனது அறிக்கையில் மனுதாரர் தனக்கு கருணை அடிப்படையிலான பணி வழங்கிட கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.10171/2018 தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்ததை தொடர்ந்து தனியருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை பணப்பயன்கள் வழங்குவது குறித்து மாநகராட்சி வழக்குரைஞர் திரு. ஜெகநாதன் அவர்களிடம் சட்டக்கருத்து கோரியதில், மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ளதால் வழக்கின் தீர்புரை பெறப்பட்ட பின்னர் பணப்பயன்கள் வழங்குவது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது என்றும், வழக்கின் தீர்ப்புரைக்கிணங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 09.01.2020 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 21.01.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்கு மூலத்தில் தனது வளர்ப்பு தாயார் மாரியம்மாள் திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து 09.02.2013ல் இறந்து விட்டார் என்றும், தான் தற்போது வேலையில்லாமல் இருப்பதாகவும், தனக்கு வாரிசுதாரர் என்ற முறையில் கருணை அடிப்படையில் பணி வழங்க ஆணை செய்யுமாறு கோரியுள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, விசாரணையின்போது, அளித்த வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புரையின்படியும், உரிய விதிமுறைகளின்படியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 28-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

1. திரு. கண்ணன்,
   S/o. செல்வி. மாரியம்மாள்,
   10G/177, நெட்டுத் தெரு,
   முனிசிபல் காலனி,
   திண்டுக்கல்.

2. ஆணையர்,
   திண்டுக்கல் மாநகராட்சி,
   திண்டுக்கல்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி